பக்கங்கள்:-18


# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 03 | வியாழக்கிழமை | 16.01.2025 | அதிர்வு 167 |
|---|---|---|---|---|---|

## கரவெட்டியில் தீயில் கருகி மூதாட்டி ஒருவர் உயிரிழப்பு



நுளம்புக்குப் புகை மூட்டிய சமயம் சேலையில் தீப்பிடித்து உடல் கருகி மூதாட்டி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். 05




### புதிய அபிவிருத்தி யுகத்துக்காக

# இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதற்குத் தயார்

### அநுரவிடம் சீன ஜனாதிபதி ஜின்பிங் தெரிவிப்பு

**சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவுக்கும் சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்குக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று புதன்கிழமை பிற்பகல் சீன மக்கள் மண்டபத்தில் நடைபெற்றது.** 05



## தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் மீது பருத்தித்துறையில் வாள்வெட்டுத் தாக்குதல்!

### சம்பவ இடத்தில் உடனே களமிறங்கிய அமைச்சர் சந்திரசேகர்



(எஸ்.ரகுதீஸ்)

யாழ். பருத்தித்துறை – கொட்டடிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் இரண்டு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் மீதே இந்த வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பருத்தித்துறை – கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த ஜெயதீபன் கண்ணன் (வயது 28), விஜயராசா செந்தூரன் (வயது 29) 05




‘தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்.’ – இது சட்டத்துறையில் அடிப்படைக் கோட்பாடு. இந்த விடயம்தான் இலங்கையின் நீதித்துறையில் பிரதான பின்னடைவுக்கான அடிப்படை என்பதும் வெளிப்படையானது.

இலங்கையின் தற்போதைய அரசமைப்பு 1978 இல் கொண்டுவரப்பட்ட போது அந்த அரசமைப்பின் கீழ் மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான விடயங்கள் மீறப்படுகின்ற போது அது தொடர்பில் நிவாரணம் பெறுவதற்கான விசேட ஏற்பாடாக 126 ஆவது பிரிவு கொண்டுவரப்பட்டது. அதன் கீழ் மக்கள் அடிப்படை உரிமை மீறல் தொடர்பில் மனுக்களை தாக்கல் செய்தால் அவை குறித்து அடுத்த இரண்டு மாதங்களுக்குள் விசாரித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்க வேண்டும் என்ற ஏற்பாடு ஆரம்பத்தில் இருந்தது. ஆனால் இப்போது திருத்தங்கள் ஊடாக அது மறைந்து விட்டது. அந்த இரண்டு மாதங்கள் என்பது இப்போது 5 ஆண்டுகள் கடத்தும் நடைமுறைப்படுத்தப்படாத அவல நிலைமை இந்த அடிப்படை 05

# வனவளத் திணைக்களம் பொது மக்களிடமிருந்து களவாடிய காணிகளை உடன் விடுவிக்க வேண்டும்

## முசலிக் கூட்டத்தில் ரவிகரன் எம்.பி காட்டம்



(விஜயரத்தினம் சரவணன்)

வனவளத் திணைக்களம் மக்களிடமிருந்து களவாடிய காணிகளை உடனடியாக விடுவிக்கவேண்டுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மான்னார் – முசலி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முசலிப் பிரதேச செயலகப்பிரிவில் பெருமளவான மக்களின் காணிகள் வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளன எனஜ் கிராமமட்ட பொது அமைப்புக்களால் குறித்த கூட்டத்தில் முறையீடுசெய்யப்பட்டது. இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை முசலிப் பிரதேசசெயலகத்தால் மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் அனுமதியுடன் வனவளத் திணைக்களத்திடமிருந்து 3,510 ஏக்கர் காணிகளும், வனஜீவராசிகள் திணைக்களத்திடமிருந்து 1,110 ஏக்கர் காணிகளும் விடுவித்துத் தரும்படி கோரப்பட்டுள்ளதாகவும் இதன்போது முசலிப் பிரதேசசெயலாளரால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

பிரதேச செயலர், கிராமஅலுவலர், காணி உரிமையாளர்களுக்குத் தெரியாமல், வனஇலாகா தமது எல்லைக்கற்களை இட்டு மக்களின் காணிகளை அபகரித்து வருகின்றது.

அத்தோடு வனஜீவராசிகள், தொல்லியல் திணைக்களத்தினர், படையினர் என பல்வேறு திணைக்களங்களும் இவ்வாறு எமது மக்களின் காணிகளை அபகரிப்புச் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதில் மிக அதிகளவான மக்களின் காணிகளை வனவளத்திணைக்களம் அபகரித்துள்ளது.

இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும், அதேபோல் நாம் இது தொடர்பில் ஜனாதிபதியுடனும், உரிய ஏனைய தரப்புக்களுடனும் பேசத் தயாராக இருக்கின்றோம்.

வனவளத் திணைக்களத்தின் அபகரிப்புச் செயற்பாடே மிக மோசமாகக் காணப்படுகின்றது. எனவே வனவளத் திணைக்களம் மக்களிடமிருந்து திருடிய காணிகளை முதலில் விடுவிக்கவேண்டும் – என்றார்.

இதன்போது கூட்டத்தில் பங்கேற்றிருந்த கிராமமட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கருத்தை கைதட்டி வரவேற்றனர்.

இதன்போது முசலிப் பிரதேசசெயலர் கருத்துத் தெரிவிக்கையில் –

இடப்பெயர்விற்கு முன்னர் மக்களால் பயன்படுத்தப்பட்டு, இடப்பெயர்விற்குப் பின்னர் வனஇலாகவால் கையகப்படுத்தப்பட்டு விடுவிக்கப்படவேண்டிய மக்களின் காணிகள், எதிர்காலத்தில் மக்களின் குடியிருப்புத் தேவை, மக்களின் விவசாயத் தேவை, மேய்ச்சல் தரவை, ஏனைய பொதுத் தேவைகள் கருதி மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் அனுமதியோடு வனவளத் திணைக்களத்திடமிருந்தும், வனஜீவராசிகள் திணைக்களத்திடமிருந்தும், முசலி பிரதேச செயலகம் உள்ளிட்ட மன்னாரின் ஏனைய பிரதேசசெயலகங்களாலும் காணிகள் விடுவித்துத் தரும்படி கோரப்பட்டுள்ளது.

அந்தவகையில் முசலி பிரதேசசெயலர் பிரிவில் வன இலாகாவிடமிருந்து 3,510 ஏக்கர் காணிகளும், வனஜீவராசிகள் திணைக்களத்திடமிருந்து 1,110 ஏக்கர் காணிகளும் உரிய முறையில் களவிஜயம் செய்து, அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு காணிகளை விடுவித்துத் தரும்படி கோரப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடனும் பேசி இந்தக் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். – என்றார் அவர்.

# ஒரு லட்சம் காணி அனுமதிப் பத்திரங்கள் போருக்குப் பின்னர் வடக்கில் விநியோகம்

(ந.லோகதயாளன்)

போருக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் ஒரு லட்சத்து 909 காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் 2013 ஆம் ஆண்டில் இருந்து 2024 ஆம் ஆண்டு வரையில் விநியோகித்த காணி அனுமதிப் பத்திர எண்ணிக்கை தொடர்பில் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணபித்த விண்ணபத்திற்கு வழங்கிய பதில் ஒன்றிலேயே இந்த எண்ணிக்கை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய வடக்கில் உச்சப் பட்சமாக வவுனியா மாவட்டத்தில் 30 ஆயிரத்து 39 அனுமதிப் பத்திரங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 29 ஆயிரத்து 488 அனுமதிப் பத்திரங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 19 ஆயிரத்து 801 அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 17 ஆயிரத்து 496 காணி அனுமதிப் பத்திரங்களும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 85 அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியில் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் 15 ஆயிரத்து 791 அனுமதிப் பத்திரங்களும், கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 11 ஆயிரத்து 307 அனுமதிப் பத்திரங்களும், கரைத்துரைப்பற்றில் 8 ஆயிரத்து 720 காணி அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டானில் 6 ஆயிரத்து 812 அனுமதிப் பத்திரங்களும், வவுனியா வடக்கில் 6 ஆயிரத்து 630 அனுமதிப் பத்திரங்களும், செட்டிகுளத்தில் 6 ஆயிரத்து 560 அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளமையோடு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் 6 ஆயிரத்து 23 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.




# ஊடகவியலாளர் மட்டு. துஷாராவுக்கு கௌரவம்!

(அபு அலா)

சிலோன் மீடியா போரத்தின் 5 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவும், இலங்கை நிர்வாக சேவை ஆளுமைகள் மற்றும் சிறந்த ஊடகவியலாளர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் நிந்தவூர், அட்டப்பளம், தோம்புக்கண்ட சுற்றுலா விடுதியில் திங்கட்கிழமை (13) இடம்பெற்றது.

போரத்தின் தலைவர் ரியாத் ஏ. மஜீட் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவுக்குத் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என்.எம்.அப்துல்லாஹ் பிரதம அதிதியாகவும், போக்குவரத்து நெடுச்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் வி.ஜெகதீஸன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இந்த விழாவின்போது சிலோன் மீடியா போரத்தின் மட்டு. மாவட்ட இணைப்பாளரும், வீரகேசரி சீலாமுனை நிருபருமான திருமதி துஷ்யந்தி சுரேஸ் (மட்டு. துஷாரா) பாராட்டப்பட்டு அவருக்கு நினைவுச் சின்னம் மற்றும் பரிசில் போன்றன வழங்கப்பட்டன.

அவற்றை பிரதம அதிதியாக கலந்துகொண்ட திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என். எம். அப்துல்லாஹ் வழங்கிக் கௌரவித்தார்.

ஊடகவியலாளர் திருமதி துஷ்யந்தி சுரேஸ் ஆயுள்வேதம் மற்றும் அலோபதி வைத்தியம் தொடர்பான மருத்துவக் கட்டுரைகள், செய்திகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய தகவல்களை தொடராக எழுதி வருகிறமைக்காக இந்த கௌரவம் வழங்கி வைக்கப்பட்டது.

தேசிய ரீதியாக கௌரவிக்கப்பட்ட ஒரே பெண் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# தமிழக மீனவர்கள் 6 பேர் விடுவிப்பு! படகோட்டிகள் இருவருக்கும் சிறை!!

## தலா 40 இலட்சம் ரூபா அபராதமும் விதிப்பு

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 8 தமிழக மீனவர்களில் 6 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். படகோட்டிகள் இருவருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மீனவர்களின் வழக்கு நேற்று புதன்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் நளினி சுபாஸ்கரன் 6 மீனவர்களை நிபந்தனைகளுடன் விடுதலை செய்தார். மேலும், படகு ஓட்டுநர்கள் இருவருக்கு தலா 40 இலட்சம் ரூபா அபராதமும் 9 மாத சிறைத்தண்டனையும் விதித்து உத்தரவிட்டார்.

இதையடுத்து விடுதலை செய்யப்பட்ட 6 மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணை தூதராக அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட இருவரும் மீண்டும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.







# 2 இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்கள் மீது கல்வீச்சு வாழைச்சேனை சுங்கான்கேணிப் பிரதேசத்தில் தாக்குதல்!

**(கனகராசா சரவணன்)**

யாழ்பாணத்தில் இருந்து கல்முனைக்கும் மற்றும் வாழைச்சேனையில் இருந்து பொத்துவில் நோக்கியும் பிரயாணித்த இலங்கை போக்குவரத்துச் சபையின் இரு பஸ்கள் மீது வாழைச்சேனை சுங்கான்கேணி 18 ஆவது மையில் பிரதேசத்தில் இனம் தெரியாதேரினால் மேற்கொள்ளப்பட்ட கல்வீச்சு தாக்குதலால் இரு பஸ்களின் கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்த சம்பவம் நேற்றுப் புதன்கிழமை இரவு 07.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பஸ்கள் வழமைபோல போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள சுங்கான் கேணி பிரதேசத்தில் இரவு 07.30 மணியளில் இனம் தெரியாதோரினால அவை மீது திடீரென கல்வீச்சு தாக்குதல் மேற்ளப்பட்டுள்ளது. பஸ்களின் கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்தன. பிரயாணிகள் தெய்வாதீனமாக உயர் தப்பினர். எவருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை.

இதனையடுத்து பஸ்கள் அங்கு நிறுத்தப்பட்டு, அவற்றில் இருந்த பிரயாணிகளை வேறு பஸ்களில் மாற்றி ஏற்றி அனுப்பப்பட்டனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 36 மணித்தியாலங்களுக்கு மழை பெய்யக்கூடும்



அடுத்த 36 மணித்தியாலங்களுக்கு வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 73 முக்கிய குளங்களில் 49 குளங்கள் நிரம்பி வழியும் நிலையை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மல்வத்து ஓயாவின் தாழ் நிலப்பகுதிகளில் சிறியளவான வெள்ளப் பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளன என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் தொடர்ந்து நிலவிவரும் மழையுடனான வானிலை காரணமாக, பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதன்படி, அங்கமுவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகளும் தற்போது திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன் குருநாகல், பதுளை, கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உரிமை மீறல் மனுக்களுக்கு ஏற்பட்டு விட்டது. அந்தளவு தூரத்திற்கு இலங்கையின் நீதித்துறை காலத்தை இழுத்தடிக்கும் கேவலம் கெட்ட கட்டமைப்பாக மாறிவிட்டது என்பதுதான் உண்மை.

அதற்கு உதாரணமான வழக்கு ஒன்று நேற்று நீதிமன்றத்தில் இடம்பெற்றிருக்கின்றது.

மிருசுவிலில் எட்டு அப்பாவிப் பொதுமக்களைப் படுகொலை செய்த வழக்கில் மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றத்தினாலும் பின்னர் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றத்தினாலும் ஏகமனதாக மரண தண்டனை உறுதி செய்யப்பட்ட கைதியான இராணுவ அலுவலர் சுனில் ரத்னாயக்காவுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னிப்பு வழங்கி விடுவித்தமைக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் வழக்குத்தான் இது.

இந்த வழக்குத் தாக்கலாகி ஏறத்தாழ ஐந்து ஆண்டுகள் கடக்கும் நிலைமை இப்போது. இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்கும் முடிவு இப்போதுதான் எடுக்கப்பட்டு அது பற்றிய விசாரணைகள் நேற்றுத் தொடங்கின.

இதே போன்ற இன்னொரு வழக்கு, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அதில் விசாரணை முடிந்து தீர்ப்பும் வழங்கப்பட்டு சுமார் இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன. கொழும்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரா கொல்லப்பட்ட விடயத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த கைதி துமிந்த சில்வா, இதேபோல ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் மன்னிப்பு அளித்து விடுவிக்கப்பட்டமைக்கு எதிரான வழக்கு அது. அந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டு, மன்னிப்பில் விடுதலையான துமிந்த சில்வா மீண்டும் சிறைக் கம்பிக்குப் பின்னால் கொண்டுவரப்பட்டு நீண்ட காலமாகிவிட்டது.

ஆனால், அதற்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்ட மிருசுவில் அப்பாவிப் பொது மக்கள் எண்மர் படுகொலை விவகாரக் குற்றவாளி சுனில் ரத்னாயக்கா விடுதலையான விவகாரம் தொடர்பான வழக்கு ஐந்து வருடங்கள் கடக்கும் நிலையிலும் இன்னும் விசாரணைக் கட்டத்தைத் தாண்டவில்லை.

நேற்றைய விசாரணையை அடுத்து வழக்கு மீண்டும் பெப்ரவரி 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டு விட்டது.

மேற்படி சுனில் ரத்னாயக்கா விடுதலையானமைக்கு எதிராக மொத்தம் ஐந்து அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் மூன்றுக்காக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் மற்றொரு மனுவுக்காக ஜனாதிபதி சட்டத்தரணி ஜிவ்ரி அழகரட்ணமும் முன்னிலையாகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணிகள் தமது வாதங்களை முடித்துக் கொண்டனர். இனி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சட்டத்தரணியும், அரசுத் தரப்பு சட்டத்தரணிகளும் தமது வாதங்களை முன் வைக்க வேண்டும்.

கைதி ஒருவரை ஜனாதிபதி மன்னித்து விடுவிப்பது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் சுனில் ரத்னாயக்கா விடுதலையில் பின்பற்றப்படவில்லை என்பது மனுதாரர்கள் தரப்பு வாதமாக உள்ளது. அதையும் தாண்டி, அந்த ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று சுமந்திரன் வாதிட்டிருக்கின்றார்.

தான் ஜனாதிபதியாக வந்தால் நாட்டைக் காப்பாற்றிய தேசிய வீரர்களை மன்னிப்பு அளித்து விடுவித்து, அவர்களுக்கு நீதி செய்வார் என்று கோட்டாபய ராஜபக்ஷ தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதியை சுட்டிக்காட்டிய சுமந்திரன், அதன் அடிப்படையில் தான்தோன்றித்தனமாக இந்த நடவடிக்கையை – சுனில் ரத்னாயக்காவை மன்னித்து விடுவிக்கும் நடவடிக்கையை – கோட்டாபய ராஜபக்ஷ எடுத்திருக்கின்றார் என்றும், அப்பாவி மக்களைக் கொலை செய்த கொலையாளி என ட்ரயல் அட் பார் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளினாலும், ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்றத்தினாலும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்ட ஒருவருக்கு தேசிய வீரர் அந்தஸ்து தரும் வகையில் இந்த மன்னிப்பு விடுதலையை அவர் தான்தோன்றித்தனமாக வழங்கியுள்ளார் என்றும் சுமந்திரன் தமது வாதத்தில் சுட்டிக்காட்டி உள்ளார்.

அது மாத்திரம் அல்ல, இத்தகைய கைதிகளுக்கு மன்னிப்பு அளிக்கும் விடயத்தில், கைதிகளுக்கு மூலத் தண்டனை வழங்கிய நீதிபதிகளின் கருத்தை ஜனாதிபதி கோரி கவனத்தில் பெற வேண்டும் என்பதைச் சுட்டி காட்டிய சுமந்திரன், மேற்படி சுனில் ரத்னாயக்காவை விடுவிக்கக் கூடாது என்று அவரது வழக்கை விசாரித்து மரண தண்டனை வழங்கிய நீதிபதிகள் ஜனாதிபதிக்கு பரிந்துரைத்திருக்க, அதை மீறி அந்த நடவடிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்திருக்கின்றார் என்பதையும் விளக்கினார்.

சம்பந்தப்பட்ட நீதிபதிகளின் பரிந்துரைக்கும் முரணாக அப்போதைய நீதி அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் கருத்துரையை முன்னிறுத்தி, இந்த நடவடிக்கையை கோட்டாபய ராஜபக்ஷ முன்னெடுத்தமை முற்றிலும் தவறான நடவடிக்கை என அவர் சுட்டிக் காட்டினார்.

நீதியரசர்கள் யசந்த கோட்டாகொட, மஹிந்த சமயவர்த்தன, அர்ஜுன ஒபயசேகர ஆகியோரைக் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் எதிர்மனுதாரர்களின் சட்டத்தரணிகளின் வாதத்தின் பின்னர் இந்த வழக்கில் தீர்ப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மன்னிப்பு விடுதலையின் பின்னர் இதுவரையில் முன்னாள் இராணுவ அலுவலர் சுனில் ரத்னாயக்கா நாட்டில் வசிக்கின்றார் என கூறப்படுகின்றது. ஆனால் தீர்ப்புக்கு முன்னர் அவர் நாட்டை விட்டுக் கம்பி நீட்டி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை...!

## தேசிய மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகிய இருவரும் தலை மற்றும் கால் பகுதிகளில் வெட்டுக்காயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

நேற்று பிற்பகல் 3 மணியளவில் தொலைபேசிமூலம்பருத்தித்துறை-கொட்டடியைச் சேர்ந்த தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளருக்குத் தொடர்பு எடுத்த நபர் ஒருவர், "நீ தானே எம்.பி.பி. அமைப்பாளர். கரையோரப் பகுதிகளில் தேசிய மக்கள் சக்திக்காக நீ தானே வேலை செய்கின்றாய்? உங்கள் கொட்டத்தை அடக்க உங்களது இடத்துக்கு வாள்வெட்டுக் குழுவென்று வருகின்றது பார்த்துக் கொள்." – என்று கூறிவிட்டு தொடர்பைத் துண்டித்துள்ளார்.

இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்து சுமார் பத்து நிமிடங்களில் கொட்டடிப் பகுதிக்கு மோட்டார் சைக்கிள்களில் வந்திறங்கிய வாள்வெட்டுக் குழுவினர் அங்கிருந்தவர்களைத் துரத்தித் துரத்தி சரமாரியாக வெட்டியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை அமைப்பாளரின் சகோதரன் உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குத் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளரான கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் வருகை தந்து விடயங்களை ஆராய்ந்த பின்னர் பருத்தித்துறை பொலிஸ் நிலையம் சென்று பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடிச் சென்றனர்.

தாக்குதல்தாரிகளைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பருத்தித்துறைப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

---

## கரவெட்டியில் தீயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவம் யாழ். கரவெட்டி மேற்கு – கவுடாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சண்முகம் பொன்னம்மா (வயது 81) என்ற மூதாட்டியே உயிரிழந்துள்ளார்.

தனிமையில் வசித்து வந்த அவர் நுளம்புக்குப் பொச்சு மட்டையில் தீ வைத்த போது அவரது சேலையில் தீ பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தைப் புதைக்குமாறு உத்தரவிட்டார்.

இது தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

---

## இலங்கையுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சீன மக்கள் மண்டபத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு, சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் அமோக வரவேற்பளித்தார், மரியாதை வேட்டுக்களுடன் மிகுந்த கௌரவமான முறையில் வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து இரு தரப்பு அரச தலைவர்களுக்கும் இடையில் சுமுகமான கலந்துரையாடல் நடைபெற்றதோடு அடுத்து இரு தரப்பு கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அபிவிருத்தியின் புதிய யுகத்துக்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அத்தோடு நெருங்கிய நட்பு நாடுகள் என்ற வகையில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவை நினைவுகூர்ந்த சீன ஜனாதிபதி சீ ஜிங்பிங் , எதிர்காலத்தில் இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.


06


## இலங்கையுடன்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான உத்தியோக பூர்வ சந்திப்பைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார, சமூக மற்றும் கைத்தொழில்துறை சார்ந்த பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.


இந்தச் சந்திப்பில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் அரச தகவல் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.கே.ஜே. பண்டார ஆகியோரும் பங்கேற்றனர்.














# மட்டு. செட்டிபாளயம் வீரமாகாளி அம்மன் ஆலய பொங்கலில் சாணக்கியன் எம்.பி.

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விசேட தைப் பொங்கல் பூஜை வழிபாடுகள் மட்டக்களப்பு செட்டிபாளயம் வீரமா காளி அம்மன் ஆலயத்தில் நடைபெற்றது.

இதன்போது மூன்று பானைகளில் பொங்கல் பொங்கப்பட்டு படைக்கப்பட்ட அம்பாளுக்கும் சூரிய பகவானுக்கும் விசேட பூஜைகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கலந்து கொண்டு பொங்கல் விழாவினை ஆரம்பித்து வைத்தார்.

இதனை தொடர்ந்து செட்டிபாளயம் பகுதியில் உள்ள பல்வேறு ஆலயங்களுக்கும் விஜயம் செய்து தைத்திருநாள் பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

செட்டிபாளையம் சிவன் ஆலயம், முருகன் ஆலயம், பைரவர் ஆலயம் என்பவனற்றில் தைத்திருநாள் வழிபாடுகளிலும் கலந்துகொண்டார்.





# மருதங்கேணியில் தேசிய மக்கள் சக்தியின் அலுவலகம் திறப்பு





யாழ். வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் தேசிய மக்கள் சக்தியின் அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

நேற்று புதன்கிழமை முற்பகல் ன்னடைபெற்ற இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் கலந்துகொண்டு அலுவலகத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் அந்தப் பகுதியைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## திராணி உண்டா?

தான் மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மதிப்பவர் எனப் பிரலாபித்து வரும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு அதனை செயலில் நிரூபித்துக் காட்ட ஒரு வரலாற்று வாய்ப்புக் கிட்டியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள ஊடகத்துறை தொடர்பான இருபத்தியைந்து சுயாதீன அமைப்புகள், அந்தக் கூற்றை நடத்தையில் காட்டுமாறு அவருக்குச் சவால் விடுத்திருக்கின்றன.

உலகளவில் ஊடகவியலாளர்களின் நலன்கள் குறித்துத் தீவிர அக்கறை கொண்டுள்ள முன்னணி அமைப்புகளில் ஒன்றான ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் குழுவுடன் (Committee to Protect Journalists) இணைந்து வேறு பல 24 சிவில் மற்றும் ஊடக சுதந்திர அமைப்புகளே இவ்வாறு ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தை பாதுகாப்பதன் மூலம் தமது கருத்தியலைச் செயலில் நிரூபிக்குமாறு இலங்கை ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளன.

நியூயோர்க்கில் தலைமையகத்தைக் கொண்டு செயல்படும் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் குழுவுடன் சர்வதேச பத்திரிகை நிறுவனம் (International Press Institute), சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனம், மனித உரிமைகள் கண்காணிப்பகம், இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்கள் சங்கம் உட்பட 24 அமைப்புகள், ஊடகச் சுதந்திரத்தை ஜனாதிபதி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என வலியுறுத்திக் கோரியுள்ளன.

சர்வதேச அளவில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளப் பாதுகாக்கும் சட்டங்கள் மற்றும் பட்டயங்களுக்கு உடன்படுவதாகத் தெரிவித்து அவற்றில் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளது. அந்த உடன்படிக்கைகளில் மாத்திரமன்றி நாட்டின் அரசியல் யாப்பிலும், சட்டங்களிலும் ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அம்சங்கள் தெளிவாக உள்ளன. அத்தோடு தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் அறிக்கையிலும் ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், ஊடகவியலாளர்களுக்கு எதிராக முன்னர் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு பொறுப்புக் கூறப்படுவதை முன்னெடுத்து உறுதிபடுத்தப்படுத்தவும் வாக்குறுதி அளித்திருந்தது.

அதனை ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் குழு தலைமையில் அந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளவர்கள் நினைவூட்டியுள்ளனர்.

"கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகள், ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள், மனித உரிமை மீறல்கள், கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக இடம்பெற்ற செயல்கள் ஆகியவை தொடர்பில் உடனடியாக மீள் விசாரணைகளை ஆரம்பிக்கப்பட வேண்டும். அவை பாரபட்சமற்ற முறையில் வெளிப்படையாக இருக்க வேண்டும். மேலும் இழைக்கப்பட்ட அநியாயங்களுக்கு பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதேவேளை இவை சில, பல ஊடகவியலாளர்களின் மரணங்கள், கடத்தல்கள், உடல்ரீதியான தாக்குதல்கள் ஆகியவற்றுக்கு மாத்திரமே என மட்டுப்படுத்தப்படாமல், 26 ஆண்டுகள் இடம்பெற்று 2009ஆம் ஆண்டு முடிவிற்கு வந்த போர்க் காலத்தில் இடம்பெற்ற தாக்குதல்கள்களையும் உள்ளடக்க வேண்டும்."- என்று அந்த அமைப்புகள் புதிய அரசைக் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

அவற்றின் கருத்துப்படி 1983 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ஊடகத் துறைக்கு எதிராக இழைக்கப்பட்ட அனைத்துக் கொடூரங்கள் குறித்தும் நீதி, நியாயமான - ஏற்றுக் கொள்ளத் தக்க - விசாரணை முறைமை ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில் இலங்கையில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் ஊடகவியலாளர்கள்தான். தமிழ் ஊடகத் தரப்புகள்தான். அவை தொடர்பில் உண்மையான - சர்வதேச நியமங்களுக்கு அமைவான - நீதி, நியாயமான - விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து அம்பலப்படுத்தி, பொறுப்பு கூறலை நிலைநாட்டும் நேர்மையான மன எண்ணம் அநுரா குமார திஸநாயக்க தலைமையிலான அரசுக்கு உண்டா? அது சந்தேகத்திற்குரியதே...!



# வீதியை புனரமைத்து தருமாறு கோரி முள்ளியவளை மக்கள் போராட்டம்

(பா.சதீசன்)

முள்ளியவளை மேற்கு நாவலர் வீதியில் வசிக்கும் மக்கள் வீதிகள் சரியான முறையில் புனரமைக்கப்படாமையால் பல அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதாக கூறி போராட்டம் ஒன்றை நேற்று மாலை முன்னெடுத்திருந்தனர்.

முல்லைத்தீவு முள்ளியவளை மேற்கு நாவலர் வீதி 1,2,3 குறுக்கு வீதிகள் 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாதமையால் அண்மைய மழை காலங்களில் மழைநீர் தேங்கி நிற்கின்றதோடு மேற்படி பகுதியில் அமைக்கப்பட்ட பாலமும் சீராக அமைக்கப்படவில்லை .

இதனால், மழைக்காலங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பதோடு, நீர் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் வீட்டுக்குள் புகுந்துள்ளது. இதனால், அந்தப் பகுதியில் வாழுகின்ற மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு மேற்படி வீதி 50 வருடங்களுக்கு மேலாக சீரின்றி காணப்படுவதோடு அவசர நிலமைகளின் போது கூட பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

முள்ளியவளை மேற்கு நாவலர் வீதி 1,2,3 குறுக்கு வீதிகளில் வசிக்கும் மக்கள் மழைக்காலங்களில் மட்டுமல்ல ஏனைய காலங்களிலும் இந்த வீதி குன்றும் குழியுமாகவே காணப்படுகின்றது. இதனால், மேற்படி வீதியில் பயணம் செய்யும் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், மாற்றுத் திறனாளிகள், வாகன சாரதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் பல்வேறு பல வருடமாக இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக குறித்த கிராம மக்கள் கருத்து தெரிவிக்கும்போது,

“2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்தும் இதுவரை புனரமைக்கப்படவில்லை. இந்த பகுதி வீதியில் அதிகமாக மாற்றுதிறனாளிகள், சிறுவர்கள் அதிகமாக இருக்கின்றனர். அவர்கள் அவசர மருந்து தேவைக்கோ, பாடசாலைக்கு கூட பயணிக்க முடியாத நிலை இருக்கின்றது. இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றது. எனவே எமது வீதிகளை பிரதேச சபையோ, மாவட்ட செயலகமோ, தற்போதுள்ள அரசாங்கமோ கவனத்தில் எடுத்து அதனை புனரமைத்து தரவேண்டும்.” என கோரிக்கை விடுத்துள்ளனர்.







### வடக்கு விவசாயப் போதனாசிரியர்களின்

# வெளிக்களக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும்!

## ஆளுநர் வேதநாயகன் அறிவுறுத்து

வடக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர்களின் வெளிக்களக் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவுறுத்தல் வழங்கினார்.

வடக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர்கள் சங்கத்தினருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், விவசாயப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர்கள் வரவுப் பதிவேட்டு இயந்திரத்தில் கையொப்பமிடுவது தொடர்பான விவகாரம் ஆராயப்பட்டு ஆளுநரின் ஆலோசனைக்கு அமைவாக தீர்வு காணப்பட்டது.

மாதத்தில் 14 நாள்கள் வெளிக்கள கடமையில் ஈடுபடுவதுடன், பிரதி திங்கட்கிழமைகளில் வரவு பதிவேட்டு இயந்திரத்தில் கையெழுத்திட்டு அலுவலகக் கடமைகளாற்ற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது.

அதேவேளை, விவசாயப் போதனாசிரியர்களின் வெளிக்களப் பணிக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சாதகமாகப் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார்.

அதேவேளை வெளிக்கள கடமைகளைச் சரிவரச் செய்யாத உத்தியோகத்தர்களுக்கும், தவறிழைத்ததாகக் கண்டறியப்படும் உத்தியோகத்தர்களுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கைகளை காலதாமதமின்றி மேற்கொள்ளுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

பதில் கடமையாற்றும் விவசாயப் போதனாசிரியர்களுக்கு அதற்குரிய கொடுப்பனவுகள் மற்றும் நிலுவைக் கொடுப்பனவுகளை விரைந்து வழங்குமாறும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் விவசாயத் துறைசார் திட்டங்கள் தொடர்பில் மாகாண விவசாயத் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட திட்டமுன்னெடுப்பு நிறுவனங்கள் கலந்துரையாட வேண்டும் எனவும், அந்தத் திட்டத்தில் பணியாற்றும் வெளிக்களப் பணியாளர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்றும் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளரை ஆளுநர் பணித்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள விவசாயப் போதனாசிரியர்களுக்கு இடையிலான இடமாற்றத்தை முன்னெடுக்க விவசாயப் போதனாசிரியர்கள் சங்கத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக உரிய முறையில் அதைச் செயற்படுத்துமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

மேலும், ஒவ்வொரு கமநலசேவை நிலையங்களுக்கும் (ஏ.பி.சி.) மூத்த விவசாயப் போதனாசிரியர் ஒருவரை பொறுப்பாக நியமிப்பது தொடர்பிலும், அதற்குரிய பொறுப்புக்கள் தொடர்பாகவும் ஆளுநரால் பணிப்புரை வழங்கப்பட்டது.

மேலும், சிறப்பாக பணியாற்றும் வெளிக்களப் பணியாளர்களுக்கு அவர்களுக்கான சேவைகளை மெச்சும் வகையில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் ஆளுநர் அறிவுறுதல் வழங்கினார்.

இதேவேளை காலத்துக்குகாலம் விவசாயப் போதனாசிரியர்களுடன் குறைகேள் சந்திப்பு நடத்தப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அதைச் செயற்படுத்துமாறு ஆளுநர் பணிப்புரை வழங்கினார்.







# இலங்கை திரும்ப விரும்பாத அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும்

## அயலகத் தமிழர் மாநாட்டில் பங்கேற்றவர்களிடம் வலியுறுத்தினார் முன்னாள் எம்.பி. திலகராஜா

இலங்கை திரும்ப விருப்பம் கொள்ளாத குறிப்பாக இந்திய வம்சாவளியினராக முகாம்களில் வாழும் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜா வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழக மறுவாழ்வு முகாம்களில் வாழும் இலங்கை அகதிகள் தமது விருப்பத்தின் பேரில் இலங்கை திரும்ப முடியும். எனினும், அவர்களுள் இலங்கை திரும்ப விருப்பம் கொள்ளாத குறிப்பாக இந்திய வம்சாவளியினராக முகாம்களில் வாழும் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும்.

இது குறித்து 2008ஃ2009 காலப்பகுதியில் குழுக்களின் பிரதித் தலைவராக இருந்த இப்போதைய மீன்பிடித்துறை அமைச்சர் தலைமையில் இலங்கை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை கவனத்தில் கொள்ளப்படுவதன் மூலம் அகதி முகாம்களில் வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களின் எண்ணிக்கை கவனத்தில் கொள்ளப்படுவதோடு அந்த எண்ணிக்கை இற்றைப்படுத்தப்படல் வேண்டும்.

இற்றைப்டுத்தப்பட்ட எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு இந்திய குடியுரிமையை வழங்க இந்திய அரசை வலியுறுத்தும் வகையில் தமிழக அரசு செயற்பட வேண்டும்.

தற்போது தமிழக அரசு முன்னெடுக்கும் மறுவாழ்வுத் திட்டங்கள் வரவேற்கக் கூடியதும் அவசியமானதும் தான். எனினும், அந்த மக்களின் இந்தியக் குடியுரிமை விடயத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என சென்னையில் நடைபெற்ற அயலகத் தமிழர் மாநாட்டில் நான் சந்திக்கக் கிடைத்த அனைத்துத் தரப்பினரிடமும் வலியுறுத்தினேன்.” – என்றார்.

# அர்ச்சுனா எம்.பியின் வழக்கு 31ஆம் திகதி விசாரணைக்கு

(ந.லோகதயாளன்)

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, தனது சட்டத்தரணிகள் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு வரையறுக்கப்பட்ட ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய அனுமதி கோரினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனாவின் நாடாளுமன்ற உறுப்புரிமை செல்லுபடியற்றது என உத்தரவிடக் கோரி தாக்கல் செய்த மனுவை அபிநவ நிவஹல் பெரமுனவின் தலைவர் ஒஷல ஹெரத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எம். கொபல்லவ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, பிரதிவாதியான நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சார்பில் ஆஜரான சட்டத்தரணி சேனானி தயாரத்ன, நீதிமன்றத்தின் முன் சமர்ப்பணங்களை முன்வைத்து, இந்த வழக்கு தொடர்பாக ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய தனது கட்சிக்காரருக்கு கால அவகாசம் வழங்குமாறு கோரினார்.

இருப்பினும், அமர்வு முறையாக அமைக்கப்படாததால், மறுநாள் இந்தக் கோரிக்கையை முன்வைக்குமாறு நீதிபதி சட்டத்தரணியிடம் தெரிவித்தார். இதையடுத்து, சம்பந்தப்பட்ட மனுவை வரும் 31ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா அரச வைத்தியராக பணியாற்றிக்கொண்டே கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தை மீறியுள்ளார் எனவும், அதன்படி, அவர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கத் தகுதியற்றவர் என்றும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வலுவிழக்கச் செய்யும் உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுவில் மேலும் கோரப்பட்டுள்ளது.

# அஸ்வெசும கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு அனுமதி

இந்த வருட இறுதி வரை அஸ்வெசும பயனாளிகளுக்காக வழங்கப்படவுள்ள நலன்புரி திட்டங்களுக்கும் தெரிவுக்குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்காக வழங்கப்படும் 15,000 ரூபா கொடுப்பனவை 17,500 ரூபா வரையிலும், 8,500 ரூபா கொடுப்பனவை 10,000 ரூபா வரையிலும், 2,500 ரூபா கொடுப்பனவை 5,000 ரூபா வரையிலும் அதிகரிப்பதற்கு அரச நிதி தொடர்பான தெரிவுக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், அஸ்வெசும கொடுப்பனவின் கீழ் 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் குடும்பங்களுக்கான கொடுப்பனவு தொகையில் மாற்றங்களை மேற்கொள்ளாதிருக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திய இருவருக்கும் மீண்டும் விளக்கமறியல்

கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியமை மற்றும் கத்தோலிக்க மக்களை சீண்டும் வகையில் கருத்து வெளியிட்டமை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சமூக செயற்பாட்டாளரான நாமல் குமார மற்றும் அசேல நுவன் ராஜபக்ஷ ஆகியோர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி இருவரும் நேற்று கொழும்பு – கோட்டை நீதவான் நிலுபுலீ லங்காபுர முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, அவர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதன்போது, சந்தேநபர்களின் கையடக்க தொலைபேசி தரவுகளைப் பெற்றுக் கொள்ள அனுமதியளிக்குமாறு கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு விடுத்த கோரிக்கைக்கு நீதவான் அனுமதியளித்துள்ளார்.

அதேநேரம், நாமல் குமாரவை



சிறைச்சாலை ஊடாக வாக்குமூலம் வழங்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



# ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 2,352 டெங்கு நோயாளர்கள் அடையாளம்

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 2,352 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் கம்பஹா மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.

இதன்படி, கம்பஹா மாவட்டத்தில் 374 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கொழும்பு மாவட்டத்தில் 304 பேரும், காலி மாவட்டத்தில் 169 பேரும் பதிவாகியுள்ளனர்.

இந்த நிலையில், நாடளாவிய ரீதியில் இதுவரை டெங்கு நோயினால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனிடையே, கடந்த ஆண்டில் மாத்திரம் 49,877 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தது டன், 24 மரணங்கள் பதிவாகியிருந்தன.




# இலங்கை - அவுஸ்திரேலியா போட்டி அட்டவணை வெளியீடு

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இரு அணிகளும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரிலும் 2 ஒருநாள் போட்டிகளை கொண்ட தொடரிலும் மோதவுள்ளன.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 6 ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ள நிலையில்,

2 ஒருநாள் போட்டிகளும் அடுத்த மாதம் 12 ஆம் மற்றும் 14 ஆம் திகதிகளில் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளன.



# சீமெந்திற்கான செஸ் வரி குறைப்பு

சீமெந்துக்காக விதிக்கப்பட்ட செஸ் வரியை குறைக்கும் நிதியமைச்சின் யோசனைக்கு அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரச நிதி தொடர்பான தெரிவுக் குழுவின் தலைவர், கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போது இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சீமெந்து பொதியின் விலை சுமார் 100 ரூபாவால் குறைவடையுமென நிதியமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# கொழும்பின் பல பகுதிகளில் 12 மணித்தியால நீர்வெட்டு

கொழும்பின் பல பகுதிகளில் இன்று 12 மணித்தியால நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

இன்று பிற்பகல் 06 மணி முதல் 12 மணித்தியாலங்களுக்கு இவ்வாறு நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளில் குறித்த காலப் பகுதிக்குள் நீர் விநியோகம் இடை நிறுத்தப்படவுள்ளது.

கொழும்பிற்கு நீரை விநியோகிக்கும் பிரதான நீர்வழங்கல் வலையமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ள பராமரிப்பு பணிகளுக்காக நீர்விநியோகம் இடைநிறுத்தப்படவுள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை கூறியுள்ளது.



# வீட்டின் மீது துப்பாக்கிச்சூடு

களுத்துறை, தொடங்கொட அமுஹேன பகுதியில் வீடொன்றை இலக்கு வைத்து நேற்று துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் எவருக்கும் காய மேற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை.

# திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை புனரமைக்கும் புதிய வேலைத்திட்டம்

திருகோணமலையிலுள்ள எண்ணெய் தாங்கிகளை புனரமைத்து மீண்டும் பாவனைக்கு எடுப்பதற்காக புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஷவலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி உள்ளிட்ட தரப்பினர் மேற்படி எண்ணெய் தாங்கிகளை அண்மையில் பார்வையிட்டனர் என வலுசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

500 ஏக்கர் காணியில் அமைக்கப்பட்டுள்ள 99 எண்ணெய் தாங்கிகளில் 24 தாங்கிகளின் முழுமையான உரிமை இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்திற்கு உள்ளது.

அவற்றை பயன்படுத்தி எரிபொருளைக் களஞ்சியப்படுத்துவதன் மூலம் சர்வதேச கப்பல்களுக்கு எரிபொருளை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு கூறியுள்ளது.

அதற்கமைய திருகோணமலை துறைமுக முனையத்தையும் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.



# டில்லியில் அதிகளவு பனிமூட்டம் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

வட மாநிலங்களில் கடந்த சில நாள்களாக கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது.

குறிப்பாக தலைநகர் டில்லியில் அதிக அளவிலான பனிமூட்டம் காணப்படுகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் டில்லி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று காலை கடும் பனிமூட்டம் சூழ்ந்து காணப்பட்டது. அடர்த்தியான மூடுபனியுடன் காணப்படும் டில்லியில் காற்றின் தரம் மிகவும் மோசமாக உள்ளது.

பல இடங்களில் சுமார் 10 அடிக்கு முன்னால் செல்லும் வாகனங்கள் கூட தெரியாத அளவிற்கு பனிமூட்டம் நிலவியதால் வாகன சாரதிகள் கடும் அவதியடைந்துள்ளனர்

இதேவேளை நேற்று முன்தினம் நிலவிய பனிமூட்டம் காரணமாக ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்ததுடன், காலை 6:30 மணி வரை குறைந்தது 39 ரயில் தாமதமாக இயக்கப்பட்டன.

## புதுடில்லி சட்டசபைத் தேர்தல்:
# அரவிந்த் கெஜ்ரிவால் வேட்புமனுத் தாக்கல்



ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதல்வருமான கெஜ்ரிவால் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

70 உறுப்பினர்களை கொண்ட புதுடில்லி சட்டசபைக்கு அடுத்த மாதம் 5 ஆம் திகைத்து தேர்தல் நடைபெற உள்ளது.

பெப்ரவரி 8 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும். இந்த தேர்தலில் ஆம் ஆத்மி, பா.ஜ.க., காங்கிரஸ் இடையே கடும் போட்டி நிலவுகிறது. புதுடில்லி சட்டசபை தேர்தலுக்காக ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதல்வருமான கெஜ்ரிவால் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு உள்ளார்.

இந்நிலையில் புதுதில்லி சட்டசபை தொகுதியில் நடைபெற உள்ள தேர்தலுக்கான வேட்புமனுவை நேற்று புதன்கிழமை அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்தார்.

முன்னதாக வேட்புமனு தாக்கல் செய்ய தனது குடும்பத்தினர் மற்றும் புதுடில்லியின் ஆம் ஆத்மி பெண் ஆதரவாளர்கள் மற்றும் சகோதரிகளுடன் அவர் சென்றுள்ளார்.

மேலும் அங்குள்ள அனுமன் கோவில் மற்றும் வால்மீகி கோவிலில் பிரார்த்தனை செய்த பிறகு கெஜ்ரிவால் வேட்புமனுவை தாக்கல் செய்தார். புதுடில்லி தொகுதியில் போட்டியிடும் கெஜ்ரிவால், இந்த முறை பா.ஜ.க.வின் பர்வேஷ் வர்மா மற்றும் காங்கிரஸ் தலைவர் சந்தீப் தீட்சித் ஆகியோரை எதிர்கொள்கிறார்.

# மார்பர்க் வைரஸ் பரவல்; தன்சானியாவில் 8 பேர் பலி



தன்சானியாவில் மார்பர்க் வைரஸ் ஆயசடிரசப எசைரள (ஆயுசுஎ) என சந்தேகிக்கப்படும் வைரஸ் பரவல் காரணமாக 8 பேர் உயிரிழந்துள்ளனர் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

தன்சானியாவின் வடமேற்கு பகுதியில் உள்ள இரண்டு மாவட்டங்களிலேயே அதிகளவான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த வைரஸ் தொற்றுக்குள்ளான 9 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், வைரஸ் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கமைய எதிர்வரும் நாள்களில் பாதிப்பு மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, வைரஸ் பரவலை உறுதிப்படுத்துவதற்கு இரண்டு தொற்றாளர்களிடமிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டு வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

# ஊழல் வழக்கிலிருந்து பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் கலிதா ஜியா விடுதலை



ஊழல் வழக்கிலிருந்து பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் கலிதா ஜியா விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் பங்களாதேஷ் பிரதமராக கலிதா ஜியா பதவி வகித்தார்.

இவர் தனது ஆட்சிக்காலத்தில் ஜியா ஆதரவற்றோர் அறக்கட்டளையின் பெயரில் அரசாங்க நிதியை மோசடி செய்ததாக குற்றம்சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் கலிதா ஜியா, அவரது மகன் தாரிக் ரஹ்மான் உள்ளிட்ட 6 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், கலிதா ஜியாவுக்கு 5 ஆண்டு சிறை தண்டனையும், மற்றவர்களுக்கு 10 ஆண்டு கடூழிய சிறை தண்டனையும் விதித்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து கலிதா ஜியா உள்ளிட்ட 6 பேரும் மேன்முறையீடு செய்தனர்.

ஆனால், மேன்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிமன்றம், கலிதா ஜியாவுக்கான தண்டனையை இரட்டிப்பாக அதிகரித்து (10 ஆண்டுகள் சிறை) உத்தரவிட்டது.

இதையடுத்து கலிதா ஜியா இதனை மேன்முறையீடு செய்தார்.

இவ்வழக்கின் விசாரணை நிறைவடைந்த நிலையில், முந்தைய உத்தரவான 10 ஆண்டு சிறைத்தண்டனையை நீதிமன்றம் இரத்து செய்து நேற்று உத்தரவிட்டது.

அத்துடன், பழிவாங்கும் நோக்கில் வழக்கு தொடரப்பட்டது நிரூபணமாகியிருப்பதாக கூறி கலிதா ஜியா உள்ளிட்ட 6 பேரையும் விடுதலை செய்து உத்தரவிட்டது.

கலிதா ஜியாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் சிகிச்சைக்காக இந்த மாத ஆரம்பத்தில் லண்டனுக்குச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 16.01.2025




தேவையற்ற மனக் கவலைகள் இன்று உங்கள் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும். அத்தகைய உணர்வுகள் ஏற்படாமல் சமாளிப்பதன் மூலம் நீங்கள் நற்பலன் பெற முடியும்.

இன்று பணியில் தவறுகள் செய்ய நேரிடலாம். கவனத்துடன் இருந்தால் சிறப்பாக செயலாற்ற முடியும்.

கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு காரணமாக உறவில் சலசலப்பு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. பணத்தை இழக்கும் வாய்ப்பிருப்பதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.

இன்று உங்களுக்கு தொண்டையில் வலி ஏற்படலாம். குளிர்மையான பொருள்கள் உண்பதை தவிர்க்கவும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லை. அனுசரித்துப் போவதன் மூலம் நன்மை பெறலாம். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். கூடுதல் பணிகள் காரணமாக நேரமும் உழைப்பும் அதிகம் தேவைப்படும். அதனால் கவலைகள் ஏற்படலாம்.

உறவில் சுமுகமான நிலை இருக்காது. மனம் திறந்து பேசி புரிய வைப்பதன் மூலம் கருத்து வேறுபாடுகளை தவிர்க்கலாம்.

இன்று பணவரவு இல்லை. பணத்தட்டுப்பாடு காரணமாக கவலைகள் ஏற்படும். கண்களில் எரிச்சல் ஏற்படலாம். தகுந்த மருத்துவம் நன்மை அளிக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக உள்ளது. உங்கள் செயல்களில் வெற்றி பெறுவதற்கான வலிமையும் ஊக்கமும் இன்று காண்பீர்கள். மொத்தத்தில் இன்றைய நாள் உங்களுக்கு செழிப்பைத் தரும்.

இன்று பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி நல்ல பெயரும் வெற்றியும் பெறுவீர்கள்.

இன்று நீங்கள் அமைதியாகவும் பக்குவமாகவும் பேசி செயல்படுவீர்கள். அதனால் புரிந்துணர்வு அதிகமாகும்.

நிதிநிலைமை இன்று சாதகமாக உள்ளது. உங்கள் கடின உழைப்பிற்காக சலுகையும் ஊக்கத்தொகையும் பெறுவீர்கள்.

இன்று உங்கள் மனம் உற்சாகத்துடன் இருக்கும். எனவே ஆரோக்கியத்தில் எந்த குறைபாடும் இருக்காது.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாளாக அமையும். பணத்தை பெருக்கும் புதிய வழியைக் காண்பீர்கள். எதிர்பாராத செல்வ ஆதாயங்களை இன்றைய நாள் உங்களுக்கு பெற்றுத் தரும்.

தொழிலில் வெற்றி கிடைக்கும். பணியை விரைந்து முடிப்பீர்கள். பணியில் நல்ல பெயர் எடுப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் பெருகும். உறவு வலுப்படும். திருப்திகரமாக இருக்கும்.

இன்று பணவரவு தாராளமாக இருக்கும். நண்பர்களிடமிருந்தும் பண உதவி கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வழக்கமான மருத்துவ பரிசோதனை செய்துகொள்வது நல்லது.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லை. எந்தவொரு செயலிலும் தெளிவாக சிந்தித்து முடிவெடுங்கள். மற்றவர்களுடன் பேசும் போது வார்த்தைகளை கவனமாக தேர்ந்தெடுத்து பேச வேண்டும்.

இன்று திறமையாக செயலாற்றுவதில் தடைகளும் ஏமாற்றங்களும் காணப்படும். இன்று சக பணியாளர்களுடன் நல்லுறவு பேண முடியாது.

கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு ஏற்படலாம். நல்லுறவைப் பேண அனுசரித்து அமைதியுடன் பேசவும்.

இன்று எதிர்பாராத பண விரயங்கள் ஏற்படலாம். தேவையற்ற செலவுகள் ஏற்படலாம். எனவே செலவுகளை கட்டுப்படுத்துங்கள்.

அதிக வேலை காரணமாக சோர்ந்து போவீர்கள்.




நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் இன்று கிட்டாது. உங்கள் தினசரி செயல்களில் கூட இன்று மாற்றங்கள் செய்து கொண்டே இருக்க வேண்டியிருக்கும். நம்பிக்கை இழக்க நேரிடலாம். தன்னம்பிக்கையுடன் போராடுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். சகபணியாளர்களிடம் கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பொறுமை இழந்து காணப்படுவீர்கள். உங்கள் துணையைப் புரிந்து கொண்டு பொறுமையுடன நடந்து கொள்ளுங்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. நிலைமையை சமாளிப்பதில் சிரமம் ஏற்படும்.

இன்று கண்களில் எரிச்சல் ஏற்படலாம். தகுந்த மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளுங்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக உள்ளது. இன்று முன்னேற்றத்திற்கான வழிமுறைகளும் நீங்கள் எதிர்பார்த்த வெற்றியும் கிட்டும். உங்கள் எண்ணங்கள் ஈடேறும்.

இன்று உங்கள் திறமைக்காக மேலதிகாரியின் பாராட்டைப்பெறுவீர்கள். உங்கள் பணியின் மூலம் உங்கள் மேலதிகாரிக்கு பெருமை ஏற்டுத்தித் தருவீர்கள்.

கணவன் மனைவிக்குள் சுமுகமான உறவு இருக்கும். உங்கள் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு பயனுள்ள முடிவை எடுப்பீர்கள்.

இன்றைய பண வரவு திருப்திகரமாக இருக்கும். இன்று உபயோகமான வழிகளில் பணத்தை செலவிடுவீர்கள்.

உங்கள் உற்சாகமான மனநிலையின் காரணமாக இன்று நாள் முழுவதும் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும்.




இன்று முன்னேற்றமான நாளாக இருக்கும். இன்று தடைகளைத்தாண்டி முன்னேறி சாதனை படைப்பீர்கள்.

இன்று நீங்கள் பலனை எதிர்பார்க்காமல் கடமையைச் செய்வீர்கள். உங்களது இந்த மனப்பான்மை காரணமாக பணியை விரைந்து முடித்து உங்கள் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையாருடன் உண்மையான அன்புடன் நடந்து கொள்வீர்கள். அதனால் உறவு வலுப்படும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். உங்கள் வங்கி இருப்பபு நிலை நல்ல முறையில் இருக்கும்.

இன்று நல்ல உற்சாகத்துடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.01.2025




இன்று பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும். எதற்கும் உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். யோகா அல்லது தியானம் செய்யுங்கள்.

இன்று பணிகளை விரைந்து முடிப்பதில் சற்று சிரமம் இருக்கும். அதிக வேலை காரணமாக வேலையில் தவறுகள் ஏற்படலாம். கவனமாக வேலை செய்ய வேண்டும்.

உங்கள் துணையுடன் சகஜமாக பழகுங்கள். அதனால் உங்களுக்கு திருப்தியும் மகிழ்ச்சியும் கிடைக்கும்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்காது. நீங்கள் எதிர்பார்த்ததை விட செலவுகள் அதிகமாக இருக்கும். அதனால் கவலைகள் ஏற்படலாம்.

இன்று உங்களுக்கு தலைவலி உபாதைகள் ஏற்படலாம். கடவுளை தியானம் செய்வதன் மூலம் அதன் உபாதையிலிருந்து விடுபடலாம்.




இன்று அமைதியான மற்றும் சந்தோஷமான சூழல் இருக்கும். இன்று நீங்கள் உங்கள் இலக்கை அடைவதற்கு நேர்மறையான எண்ணத்துடன் செயல்படுவீர்கள்.

இன்று பணியின் மூலம் ஆதாயம் கிடைக்கும். நீங்கள் இன்று திறமையாகவும் துல்லியமாகவும் பணியை முடிப்பீர்கள்.

இன்று கணவன் மனைவி நட்புறவுடன் பழகுவீர்கள். அதனால் அன்பும் அன்யோன்யமும் அதிகரிக்கும்.

இன்று பணவரவு காணப்படும். உங்கள்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் அளவிற்கு நிதிநிலைமை போதுமானதாக இருக்கும்.

இன்று உற்சாகத்துடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




நீங்கள் எதிர்பாரத்த பலன்கள் இன்று கிடைப்பது அரிது. இன்றைய நாள் உங்களுக்கு குறைந்த அளவே அனுகூலமாக இருக்கும்.

இன்று பணிச் சுமை அதிகமாக இருக்கும். திட்டமிட்டு வேலை செய்யுங்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை மற்றும் நகைச்சுவை உணர்வுடன் பழக வேண்டிய நாள். நட்புடன் பேசினால் நல்லுறவைப் பேணலாம்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. கூடுதல் செலவுகள் காரணமாக பணப்பற்றாக்குறை ஏற்படலாம்.

தாயின் உடல்நிலை பற்றிய கவலை இருக்கும். எனினும் சிறிய அளவிலான நோயாகத்தான் இருக்கும்.




இன்று எதிர்மறையான எண்ணங்கள் உங்கள் மனதில் தோன்றலாம். அதைத் தவிர்த்தால் முன்னேற்றம் உண்டாகும். எதையும் யதார்த்தமாக அணுகுங்கள்.

கவனக்குறைவால் வேலையில் தவறுகள் ஏற்டலாம். திட்டமிட்டுத் திறமையுடன் செய்வதன் மூலம் வெற்றி காணலாம்.

அன்பைக் கொடுத்து அன்பை வாங்குவதன் மூலம் சந்தோஷத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்.

இன்று அதிகரிக்கும் செலவினங்கள் இருக்கும். நீங்கள் ஏற்றுக் கொண்ட அல்லது ஒப்புக் கொண்ட காரியங்களுக்காக பணம் செலவு செய்ய நேரிடலாம். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று முதுகு வலி வர வாய்ப்பு உள்ளது. இறை வழிபாடு அல்லது தியானம் மூலம் ஆரோக்கியத்தை வலுப்படுத்தலாம்.

# கால் ஒன்றை இழந்த முன்னாள் போராளி மோ. சைக்கிள் மோதியதில் அங்கேயே பலி

## ஓட்டி வந்தவர் தப்பி ஓட்டம்; வாழைச்சேனையில் சம்பவம்







**(கனகராசா சரவணன்)**

வீதியில் நடந்து சென்ற மாற்றுத்திறனாளியான முன்னாள் விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் மீது மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளை செலுத்தியவர்கள் மோட்டார் சைக்கிளை அங்கு விட்டுவிட்டு தப்பி ஓடினார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் புதன் கிழமை இரவு மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கறுவாக்கேணி கலைவாணி வீதியைச் சேர்ந்த 36 வயதுடைய விஜயநாதன் வினோஜித் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் வாழைச்சேனை கிரான் வீதியிலுள்ள ஜஸ் பக்டரிக்கு அருகாமையிலுள்ள மதுபானசாலை ஒன்றில் இருந்து நேற்று இரவு 8.30 மணிக்கு வீடு செல்வதற்காக வீதிக்கு நடந்து வந்த நிலையில் வீதியால் பிரயாணித்த மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதியுள்ளது. அவர் வீதியில் வீழ்ந்து சம்பவ இடத்திலே உயிரிழந்தமையை அடுத்து மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் அதனை அங்கு விட்டு விட்டுத் தப்பி ஓடியுள்ளார்.

இதனையடுத்து பொலிசார் உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிளை மீட்டு பொலிஸ் நிலையத்துக்குத் தாங்கள் கொண்டு சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை இந்த விபத்தில் உயிரிழந்த முன்னாள் போராளி புனர்வாழ்வு பெறவில்லை என்பதுடன் ஒரு காலை இழந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.